**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் : MCOP No: 123/2018 தேதி: 28.03.2025**

**ம.சா. 1 – வேலுச்சாமி**

**<u>மனுவில் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :</u>**

( 2 வது எதிர்மனுதாரர் தரப்பில்)

1வது எதிர்மனுதாருக்கு சொந்தமான சரக்கு வாகனத்தில் நான் பயணம் செய்யும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வாகனத்தில் நான், ஓட்டுநர் மற்றும் மற்றொருவரும் சென்றோம். சரக்கு வாகனத்தில் பயணியாக பயணம் செய்ய முடியாது எனவும், நான் பயணியாக பயணம் செய்ததால் 2 வது எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. சரக்கு வாகனத்தில் ஓட்டுநர் மற்றும் மற்றொருவரும் பயணம் செய்ய முடியும் எனவும் மூன்று நபர்கள் பயணம் செய்ய முடியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் பயணம் செய்த சரக்கு வாகனத்திற்கு ஓட்டுநருக்கு மட்டும் பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளதால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எவ்வளவு வருமானம் ஈட்டி வருகிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் சரக்கு வாகனத்தில் என்னை பயணம் செய்ய அனுமதித்ததால் 1வது எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றும் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

**( மருத்துவக்குழுமம் வழங்கிய ஊனச்சான்று சா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.